මගේ අංකය / எனது இல. / My No. ஓய்வு/கொள்/06/11-2023 ඔබේ අංකය / உமது இல. / Your No. ...... දිනය / திகதி / Date 2024.10.10

**ஓய்வூதிய அறிவுறுத்தல் கடிதம்: 01/2024 (திருத்தம் I)**

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
திணைக்கள தலைவர்கள்/ மாவட்டச் செயலாளர்கள்
பிரதேச செயலாளர்கள் மற்றும்
உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள்

**விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்திற்கான நிலுவைத் தொகையில் பங்களிப்புக்கு பொருந்தக்கூடிய காலத்தின் அடிப்படையில் அறவிடுவேண்டிய 4% எளிய வட்டியை கணக்கிடும் முறை**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக வெளியிடப்பட்ட 2024.04.02 ஆம் திகதிய 01/2024 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை அறிவுறுத்தல்க் கடிதத்தின் மீது தங்கள் கவனம் ஈர்கப்படுகிறது.

02. மேலே குறிப்பிடப்பட்ட அறிவுறுத்தல் கடிதத்தின் விதிகளின்படி, 04 மாதிரி கணக்கீடுகள், 2023.06.01 ஆம் திகதிக்கு முன்னரான காலகட்டங்களில் விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்திற்கான நிலுவைத் தொகையை மீட்டெடுப்பதற்காக 4% எளிய வட்டியை கணக்கிடுவதற்கான வழிமுறைகள் 01,02,03 மற்றும் 04 ஆம் இலக்க இணைப்புகள் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்றன.

ஒப்பம்
ஏ. ஜகத் டி. டயஸ்
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்

தொ.இல : 011 2 421786
தொலை நகல் : 011 2 431413
மின்னஞ்சல் : pen7policydep@gmail.com

பிரதி: செயலாளர், நீதி, பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் தொழிலாளர் அமைச்சு – த.த.த

ஒரு அலுவலரின் நாளாந்த ஊதியம் / அமைய அடிப்படையில் சேவைக் காலத்திற்கு பொருந்தும் விதவைகள் அனாதைகளின் ஓய்வூதியத்தை கணக்கிடுதலும் அத்தகைய காலத்திற்குப் பொருந்தும் 4% என்ற எளிய வட்டியை கணக்கிடுதலும்.

ஒரு குறிப்பிட்ட ஊழியர் 2006.01.01 முதல் 2008.11.01 வரையிலான காலக்கட்டத்தில் அமைய / நாளாந்த ஊதிய அடிப்படையில் பணியாற்றியிருந்தால் மற்றும் விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்திற்கான பங்களிப்புகள் ஓய்வூதியத்தின் போது மேற்கூறிய அமைய அடிப்படைக் காலத்திற்கு பங்களிக்கப்படவில்லை என்றால், ஓய்வூதியத் திணைக்களம் அத்தகைய சேவைக் காலத்தை ஓய்வூதியக் கணக்கீட்டிற்குப் பயன்படுத்துவதற்கு ஒப்புதல் அளித்திருந்தால், மேலும் அந்த ஊழியர் 2020.12.31 ஆம் திகதி தொடக்கம் ஓய்வுபெற்றிருந்தால், மேற்கூறிய காலத்திற்கான பங்களிப்பு நிலுவைத் தொகையையும் மற்றும் 4% என்ற எளிய வட்டியையும் கணக்கிடுவதற்கு பின்பற்ற வேண்டிய முறை கீழே கொடுக்கப்பட்டுள்ளது,

பி.கு. –

I. இந்த நோக்கத்திற்காக, அமைய / நாளாந்த ஊதிய அடிப்படையில் பதவியில் பணிபுரிந்த காலம் 2020.12.31 ஆம் திகதி வரை, அலுவலர் ஓய்வு பெறுவதற்கு அனுப்பப்பட்ட திகதியின் அடிப்படையில் நிலுவையில் உள்ள பங்களிப்புகள் மற்றும் 4% எளிய வட்டி ஆகியவை கணக்கிடப்பட வேண்டும். அத்தகைய கணக்கீடு செய்யப்படும் போது, நிரந்தர மற்றும் ஓய்வூதிய உரித்துடைய பதவியின் கீழ் உள்ள காலத்திற்கு விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்திற்கான பங்களிப்புகள் முறையாக செலுத்தப்பட்டதாக கருதப்படுகிறது.

II. அலுவலர் பணியில் இருக்கும் போது விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்திற்கான நிலுவைத் தொகையை செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டால், நிலுவையில் உள்ள பங்களிப்புகள் மற்றும் 4% எளிய வட்டி செலுத்தப்படும் திகதிக்கு கணக்கிடப்பட வேண்டும்.

| வருடம் | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ |
|---|---|---|---|---|---|---|---|---|
| | நாட்களின் எண். | வருடாந்த சம்பளம் | வருடாந்த பங்களிப்பு (ஆ x 6%) | பங்களித்த நாட்களின் எண்ணிக்கை (ஈ÷360 x அ) | மொத்த பங்களிப்பு | எழிய வட்டி (உ x 4%) | மொத்த எழிய வட்டி | செலுத்தப்பட வேண்டிய நிலுவையில் உள்ள பங்களிப்பு+ எழிய வட்டி (உ+எ) |
| 2006 | 208 | 140,760.00 | 8,445.60 | 4,879.68 | 4,879.68 | 195.19 | 195.19 | 5,074.87 |
| 2007 | 292 | 140,760.00 | 8,445.60 | 6,850.32 | 11,730.00 | 469.20 | 664.39 | 12,394.39 |
| 2008 | 146 | 140,760.00 | 8,445.60 | 3,425.16 | 15,155.16 | 606.21 | 1,270.60 | 16,425.76 |
| 2009 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 15,155.16 | 606.21 | 1,876.81 | 17,031.97 |
| 2010 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 15,155.16 | 606.21 | 2,483.02 | 17,638.18 |
| 2011 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 15,155.16 | 606.21 | 3,089.23 | 18,244.39 |
| 2012 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 15,155.16 | 606.21 | 3,695.44 | 18,850.60 |
| 2013 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 15,155.16 | 606.21 | 4,301.65 | 19,456.81 |
| 2014 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 15,155.16 | 606.21 | 4,907.86 | 20,063.02 |
| 2015 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 15,155.16 | 606.21 | 5,514.07 | 20,669.23 |
| 2016 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 15,155.16 | 606.21 | 6,120.28 | 21,275.44 |
| 2017 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 15,155.16 | 606.21 | 6,726.49 | 21,881.65 |
| 2018 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 15,155.16 | 606.21 | 7,332.70 | 22,487.86 |
| 2019 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 15,155.16 | 606.21 | 7,938.91 | 23,094.07 |
| 2020 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 15,155.16 | 606.21 | 8,545.12 | 23,700.28 |
| செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை + எளிய வட்டி | | | | | | | | **23,700.28** |

**ஒரு அலுவலரின் நாளாந்த ஊதியம் / அமைய அடிப்படையில் பணிபுரிந்து, நிரந்தர மற்றும் ஓய்வூதிய உரித்துடைய சேவையின் கீழ் பணிபுரிந்தாலும், நாளாந்த ஊதியம் / அமைய அடிப்படையில் செவைக்காலத்திற்காக செலுத்த வேண்டிய தொகையில் இருந்து பங்களிப்பில் ஒரு பகுதி மட்டுமே செலுத்தப்பட்டால், பங்களிப்பு நிலுவைத் தொகை மற்றும் 4% எளிய வட்டியைக் கணக்கிடுதல்.**

ஒரு குறிப்பிட்ட ஊழியர் 2006.01.01 முதல் 2008.11.01 வரையிலான காலக்கட்டத்தில் நாளாந்த ஊதிய / அமைய அடிப்படையில் பணியாற்றியிருந்தால் மற்றும் ஓய்வூதியத் திணைக்களம் அத்தகைய சேவைக் காலத்தை ஓய்வூதியக் கணக்கீட்டிற்குப் பொருந்தும் வகையில் ஒப்புதல் அளித்திருந்தால், மேலும் அந்த ஊழியர் 2020.12.31 முதல் ஓய்வு பெற்றால், மேலும் இளைப்பாறலின் போது ஊழியர் 2015 ஆம் ஆண்டுக்கான விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய பங்களிப்பாக ரூ. 5,055.20 செலுத்தப்படுகையில், விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்திற்கான பங்களிப்பு செலுத்தப்படாத காலத்திற்கு நிலுவையில் உள்ள பங்களிப்பையும் மேலும் அதன் 4% என்ற எளிய வட்டியைக் கணக்கிடுவதற்கும், பின்பற்ற வேண்டிய முறை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

பி.கு. –

I. **இந்த நோக்கத்திற்காக, நிலுவையில் உள்ள பங்களிப்புகள் மற்றும் 4% எளிய வட்டி ஆகியவை அமைய / நாளாந்த ஊதிய அடிப்படையில் உள்ள பதவியில் 2020.12.31 வரை, அலுவலர் ஓய்வு பெறுவதற்கு அனுப்பப்பட்ட திகதியின் அடிப்படையில் கணக்கிடப்பட வேண்டும். அத்தகைய கணக்கீடு செய்யப்படும் போது, நிரந்தர மற்றும் ஓய்வூதிய உரித்துடைய சேவையின் கீழ் உள்ள காலத்திற்கு விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்திற்கான பங்களிப்புகள் முறையாக செலுத்தப்பட்டதாக கருதப்படுகிறது.**

II. **அலுவலர் பணியில் இருக்கும் போது விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்திற்கான நிலுவைத் தொகையை செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டால், அத்தகைய தொகை செலுத்தப்பட்ட திகதிக்கு நிலுவையில் உள்ள பங்களிப்புகள் மற்றும் 4% எளிய வட்டி கணக்கிடப்பட வேண்டும்.**

| | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வருடம் | நாட்களின் எண். | வருடாந்த சம்பளம் | வருடாந்த பங்களிப்பு (ஆ x 6%) | பங்களித்த நாட்களின் எண்ணிக்கை (ஈ÷360 x அ) | கொடுப்பனவு | மொத்த பங்களிப்பு | எழிய வட்டி (உ x 4%) | மொத்த எழிய வட்டி | செலுத்தப்பட வேண்டிய நிலுவையில் உள்ள பங்களிப்பு+ எழிய வட்டி (உ+எ) |
| 2006 | 208 | 140,760.00 | 8,445.60 | 4,879.68 | 0.00 | 4,879.68 | 195.19 | 195.19 | 5,074.87 |
| 2007 | 292 | 140,760.00 | 8,445.60 | 6,850.32 | 0.00 | 11,730.00 | 469.20 | 664.39 | 12,394.39 |
| 2008 | 146 | 140,760.00 | 8,445.60 | 3,425.16 | 0.00 | 15,155.16 | 606.21 | 1,270.60 | 16,425.76 |
| 2009 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 15,155.16 | 606.21 | 1,876.81 | 17,031.97 |
| 2010 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 15,155.16 | 606.21 | 2,483.02 | 17,638.18 |
| 2011 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 15,155.16 | 606.21 | 3,089.23 | 18,244.39 |
| 2012 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 15,155.16 | 606.21 | 3,695.44 | 18,850.60 |
| 2013 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 15,155.16 | 606.21 | 4,301.65 | 19,456.81 |
| 2014 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 15,155.16 | 606.21 | 4,907.86 | 20,063.02 |
| 2015 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 5,055.20 | 10,099.96 | 404.00 | 5,311.86 | 15,411.82 |
| 2016 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 10,099.96 | 404.00 | 5,715.86 | 15,815.82 |
| 2017 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 10,099.96 | 404.00 | 6,119.86 | 16,219.82 |
| 2018 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 10,099.96 | 404.00 | 6,523.86 | 16,623.82 |
| 2019 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 10,099.96 | 404.00 | 6,927.86 | 17,027.82 |
| 2020 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 10,099.96 | 404.00 | 7,331.86 | 17,431.82 |
| செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை + எளிய வட்டி | | | | | | | | | 17,431.82 |

**ஒரு அலுவலரின் நிரந்தர மற்றும் ஓய்வூதியம் பெறக்கூடிய சேவைக்காலத்தினுள் ஊதிய மற்ற விடுமுறைக் காலம் அமையுமானால், அத்தகைய ஊதிய மற்ற விடுமுறைக் காலத்திற்கு பங்களிப்பு நிலுவைத் தொகையைக் கணக்கிடுதல் மற்றும் அத் தொகைக்கான 4% எளிய வட்டியைக் கணக்கிடுதல்.**

ஒரு அலுவலர் 2006.01.01 அம் திகதி முதல் நிரந்தர மற்றும் ஓய்வூதியத் உரித்துடைய பதவியின் கீழ் பணிபுரிந்து 2020.12.31 ஆம் திகதி முதல் சேவையில் இருந்து ஓய்வுபெற்றிருந்தால், மெலும் 2013,2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் அவரது நிரந்தர மற்றும் ஓய்வூதியம் பெறக்கூடிய சேவைக்காலத்தினுள் ஊதிய மற்ற விடுமுறைக் காலம் அமையுமானால், ஊதிய மற்ற விடுமுறைக் காலத்திற்கு நிலுவையில் உள்ள விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய பங்களிப்பையும் மேலும் அதன் 4% என்ற எளிய வட்டியைக் கணக்கிடுவதற்கும், பின்பற்ற வேண்டிய முறை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

பி.கு: –

I. **இந்த நோக்கத்திற்காக, ஊதியமற்ற விடுமுறைக் காலங்களுக்கு நிலுவையில் உள்ள பங்களிப்புகள் மற்றும் 4% எளிய வட்டி ஆகியவை 2020.12.31 வரையிலான சேவைக் காலத்திற்கு கணக்கிடப்பட வேண்டும். அத்தகைய கணக்கீடு செய்யப்படும் போது, முழு ஊதியத்துடன் சேவைக் காலத்திற்கான பங்களிப்புகள் முறையாக செலுத்தப்பட்டதாகக் கருதப்படுகிறது.**

II. **அலுவலர் பணியில் இருக்கும் போது விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்திற்கான நிலுவைத் தொகையை செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டால், அத்தகைய தொகை செலுத்தப்பட்ட திகதிக்கு நிலுவையில் உள்ள பங்களிப்புகள் மற்றும் 4% எளிய வட்டி செலுத்தப்படும் திகதிக்கு கணக்கிடப்பட வேண்டும்.**

| | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருடம் | நாட்களின் எண். | வருடாந்த சம்பளம் | வருடாந்த பங்களிப்பு (ஆ x 6%) | பங்களித்த நாட்களின் எண்ணிக்கை (ஈ÷360 x அ) | மொத்த பங்களிப்பு | எழிய வட்டி (உ x 4%) | மொத்த எழிய வட்டி | செலுத்தப்பட வேண்டிய நிலுவையில் உள்ள பங்களிப்பு+ எழிய வட்டி (உ+எ) |
| 2006 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| 2007 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| 2008 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| 2009 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| 2010 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| 2011 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| 2012 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| 2013 | 208 | 378,600.00 | 22,716.00 | 13,124.80 | 13,124.80 | 524.99 | 524.99 | 13,649.79 |
| 2014 | 292 | 382,200.00 | 22,932.00 | 18,600.40 | 31,725.20 | 1,269.01 | 1,794.00 | 33,519.20 |
| 2015 | 146 | 385,800.00 | 23,148.00 | 9,387.80 | 41,113.00 | 1,644.52 | 3,438.52 | 44,551.52 |
| 2016 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 41,113.00 | 1,644.52 | 5,083.04 | 46,196.04 |
| 2017 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 41,113.00 | 1,644.52 | 6,727.56 | 47,840.56 |
| 2018 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 41,113.00 | 1,644.52 | 8,372.08 | 49,485.08 |
| 2019 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 41,113.00 | 1,644.52 | 10,016.60 | 51,129.60 |
| 2020 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 41,113.00 | 1,644.52 | 11,661.12 | 52,774.12 |
| செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை + எளிய வட்டி | | | | | | | | **52,774.12** |

**ஒரு அலுவலரின் நிரந்தர மற்றும் ஓய்வூதியம் பெறக்கூடிய சேவை காலத்தினுள் சம்பளமற்ற சேவைக் காலங்கள் வருமானால், அச் சம்பளமற்ற சேவைக் காலத்திற்கான நிலுவைத் தொகைக்கான பங்களிப்பையும் மற்றும் 4% எளிய வட்டியையும் கணக்கிடுதல்.**

ஒரு அலுவலர் 2006.01.01 ஆம் திகதி முதல் நிரந்தர மற்றும் ஓய்வூதிய உரித்துடைய பதவியின் கீழ் பணிபுரிந்து 2020.12.31 ஆம் திகதி முதல் ஓய்வு பெற்றிருந்தால், மற்றும் 2013,2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் அவரது அந்தச் சேவைக் காலத்திற்குள் சம்பளமற்ற காலங்கள் வந்தால், மேலும் ரூ. 15,055.20 பங்களிப்பு விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்திற்காக 2017 ஆம் ஆண்டு ஓய்வூதியத்தின் போது செலுத்தப்பட்டுள்ளது, விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்திற்கான பங்களிப்புகள் செலுத்தப்படாத சம்பளமற்ற காலத்திற்கு நிலுவையில் உள்ள பங்களிப்பைக் கணக்கிடுவதற்கும் மற்றும் 4% எளிய வட்டி கணக்கிடுவதற்கும் பின்பற்ற வேண்டிய முறை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

பி.கு. –

I. **இந்த நோக்கத்திற்காக, சம்பளமற்ற விடுமுறைக் காலத்துக்கு நிலுவையில் உள்ள பங்களிப்புகள் மற்றும் 4% எளிய வட்டி ஆகியவை 2020.12.31 வரையிலான சேவைக் காலத்திற்கு கணக்கிடப்பட வேண்டும். அத்தகைய கணக்கீடு செய்யப்படும் போது, முழு ஊதியத்துடன் சேவைக் காலத்திற்கான பங்களிப்புகள் முறையாக செலுத்தப்பட்டதாகக் கருதப்படுகிறது.**

II. **அலுவலர் சேவையில் இருக்கும் போது விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்திற்கான நிலுவைத் தொகையை செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டால், நிலுவையில் உள்ள பங்களிப்புகள் மற்றும் 4% எளிய வட்டி செலுத்தப்படும் திகதிக்கு கணக்கிடப்பட வேண்டும்.**

| | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வருடம் | நாட்களின் எண். | வருடாந்த சம்பளம் | வருடாந்த பங்களிப்பு (ஆ x 6%) | பங்களித்த நாட்களின் எண்ணிக்கை (ஈ÷360 x அ) | கொடுப்பனவு | மொத்த பங்களிப்பு | எழிய வட்டி (உ x 4%) | மொத்த எழிய வட்டி | செலுத்தப்பட வேண்டிய நிலுவையில் உள்ள பங்களிப்பு+ எழிய வட்டி (ஊ+ஏ) |
| 2006 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| 2007 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| 2008 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| 2009 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| 2010 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| 2011 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| 2012 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| 2013 | 208 | 378,600.00 | 22,716.00 | 13,124.80 | 0.00 | 13,124.80 | 524.99 | 524.99 | 13,649.79 |
| 2014 | 292 | 382,200.00 | 22,932.00 | 18,600.40 | 0.00 | 31,725.20 | 1,269.01 | 1,794.00 | 33,519.20 |
| 2015 | 146 | 385,800.00 | 23,148.00 | 9,387.80 | 0.00 | 41,113.00 | 1,644.52 | 3,438.52 | 44,551.52 |
| 2016 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 41,113.00 | 1,644.52 | 5,083.04 | 46,196.04 |
| 2017 | 0 | 0.00 | 0.00 | 0.00 | **15,055.20** | 26,057.80 | 1,042.31 | 6,125.35 | 32,183.15 |
| 2018 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 26,057.80 | 1,042.31 | 7,167.66 | 33,225.46 |
| 2019 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 26,057.80 | 1,042.31 | 8,209.97 | 34,267.77 |
| 2020 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 26,057.80 | 1,042.31 | 9,252.28 | 35,310.08 |
| செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை + எளிய வட்டி | | | | | | | | | **35,310.08** |